திரு. ஜே. எஸ். இராசு : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் மதுவிலக்கு மிகவும் கடுமையாக அமல் படுத்தப்படுவதாக சொல்லப்படுகிறது. ஆனால், இந்த ராகிங் செய்கின்ற மாணவர் கள் சாதாரண புதிய மாணவர்களை மது குடிக்கக் கட்டாயப் படுத்துகிறார்கள், முடியாது என்று சொன்னால், அவர்கள் கல்லூரி யையும் விடுதியையும் விட்டு ஊருக்குச் செல்கிறேன் என்று அனுமதி கேட்டு முதல்வருக்கு கடிதம் எழுதி கொடுத்துவிட்டுச் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, குறைந்தபட்சம் குடிக்க முடியாது என்று சொல்கின்ற மாணவனுக்குப் பாதுகாப்பு தந்து, அவர்களுடைய கல்வி பாதிக்காத அளவிற்குச் செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர் களே, இப்படிப்பட்ட குறிப்பிட்ட சம்பவங்கள் பற்றி எங்களுக்குத் தகவல் தெரிவிக்கப்படுமானால் நிச்சயமாக அதைப் பற்றி ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க அரசு தயங்காது. ஒழுங் காக நடக்கும் மாணவர்களும் இருக்கிறார்கள். தவறு செய்கிற மாணவர்கள் மீது நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது பல கல்லூரிகளில் எடுக்கப்பட்டு இருக்கின்றன.

சின்னமனூரிலுள்ள ஸ்ரீ கிருஷ்ண அய்யர் மேல்நிலைப்பள்ளி.

*வினா எண். 285—திரு. ப. நெடுமாறன். மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், சின்னமனூரில் உள்ள ஸ்ரீ கிருஷ்ண அய்யர் மேல்நிலைப்பள்ளி நிர்வாகம் பற்றிய புகார்கள் அரசுக்கு வந்துள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், அந்தப் பள்ளியை அரசு எடுத்துக் கொண்டு நிர்வாகச் சீர்கேடுகளைக் களைய நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் ; (அ) ஆம்.

(ஆ) மேற்படி பள்ளியின் ஆயுட்கால தலைவருக்கும் அதன் செயலாளர் மற்றும் உறுப்பினர்களுக்கிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக எழுந்த வழக்கு இன்னும் நீதிமன்றத்தில் முடிவாகாத நிலையில் உள்ளது, எனவே, அரசு இப்பொழுது மேல் நடவடிக்கை ஏதும் எடுக்க இயலாது.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கெனவே, உயர்நீதி மன்றம் ஒரு தீர்ப்பைக் கொடுத்து இருக் கிறது. அதன்படி அமைக்கப்பட்ட நிர்வாகக் குழுவை இப்போ

1981 பிப்ரவரி 27]

துள்ள தலைவர் கூட்டுவதே இல்லை. நிர்வாகக் குழுவைக் கூட்டாமல், நிர்வாகக் குழுவின் சம்மதம் இல்லாமல் எந்த நியமனமும் செய்யக்கூடாது என்று உத்தரவு இருந்த போதிலும், அதையும் மீறி தொடர்ந்து நியமனங்கள் அந்தத் தலைவரால் தன்னிச்சையாக செய்யப்பட்டிருக்கிறது. இதுவரையில் அந்த நிர்வாகக் குழுவின் கூட்டம் ஒன்று கூட நடக்கவில்லை. தலைவரே எல்லாக் காரியங்களையும் செய்து கொண்டு இருக்கிறார். முறைகேடாகவும், ஒழுங்கற்ற முறையிலும் நடந்து வரும் அந்தத் தலைவரை நீக்கி விட்டு, அரசாங்கமே அதை எடுத்துக்கொள்ள முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-30]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளியின் நிர்வாகத்திலுள்ள பூசல் தீர்க்கப்படாத நிலையில் ஆசிரியர்களுக்கான ஊதிய உயர்வுகள், விடுப்புகள், முன்பணம் பெறுதல், தேர்வுநிலை வழங்குதல் போன்ற விண்ணப்பங்களின் நடவடிக்கை எடுக்க இயலவில்லை என பெரியகுளம் மாவட்டக் கல்வி அலுவலர் தெரிவித்ததின் பேரில் மேற்படி பள்ளியின் நிர்வாகத் தலைவருக்கு பள்ளியின் நிர்வாக பூசல் தீரும் வரை ஏன் மேற்படி விஷயங்களுக்கு மாவட்டக் கல்வி அலுவலருக்கு அதிகாரம் அளிக்கக்கூடாது என்று பள்ளிக் கல்வி இயக்குநர் தனது 1980 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 22 ஆம் நாளிட்ட கடிதத்தில் கேட்டுக்கொண்டார். இக்கடிதத்தின் மீது உடனடியாக ஆயுட்காலத் தலைவர் கோர்ட்டுக்கு சென்று இருக்கிறார்கள். ஆகவே, இந்தச் சூழ்நிலையில் அடுத்து என்ன நடவடிக்கை எடுப்பது என்பது பற்றி ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ப. நெடுமாறன் : தலைவரவர்களே, ஏற்கெனவே, உயர்நீதிமன்றத்தால் அளிக்கப்பட்ட தீர்ப்பை அமல் நடத்த வேண்டும் என்று அந்த நிர்வாகத் தலைவரை அரசு வற்புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அதை நாம் வற்புறுத்தி வருகிறோம். அதற்கு அவர்கள் சில நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு இருப்பதாகச் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. அந்த முழு விவரமும் தெரிந்ததற்குப் பிறகு நாம் நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. வே. இரா. ஜெயராமன் : தலைவரவர்களே, சின்னமனூரைப் பொறுத்தவரையில் இருக்கின்ற ஒரே மேல்நிலைப்பள்ளி கிருஷ்ணய்யர் மேல்நிலைப்பள்ளிதான். அந்தப் பள்ளியில் படிக்கின்ற மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஏற்படுகின்ற மனத்

தாங்கல் காரணமாக அடிக்கடி வேலை நிறுத்தங்கள் போன்றவை கள் நடக்கின்றன. மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறியபடி கோர்ட்டுக்கு போகின்ற அந்த நிலையை வைத்துக்கொண்டு அர சாங்கம் எடுக்கின்ற நடவடிக்கைகளை முடமாக்கிக் விடுகின்றனர். ஆகவே, சென்னை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புப்படியாவது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, உச்ச நீதிமன்றத்தில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தீர்ப்பு தரவில்லை. நிர்வாகக் குழுவிலே சில மாறுதல் களைச் செய்ய வேண்டும் என்றுதான் சொல்லப்பட்டிருக்கின்றது. அது பற்றி அரசு சொன்னதற்குப் பிறகு அந்த அடிப்படையிலே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகச் சொல்கிறார்கள். ஆகவே, அதைப் பற்றி முழுமையாகத் தெரிந்த பிறகுதான் மேற் கொண்டு நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. ஆர். டி. கோபாலன் : தலைவரவர்களே, அந்தப் பள்ளியில் நிர்வாகச் சீர்கேடு அதிகமாகிக்கொண்டிருக்கின்ற கார ணத்தால் அங்கே மாணவர்களிடையே மோதல் ஏற்பட்டு கத்திக் குத்து போன்ற சம்பவங்கள் நடந்தது பற்றி அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ? அரசு அதன் மீது நடவடிக்கை எடுத்ததா என் பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அதுபற்றிய விவரம் என்னிடத்திலே இல்லை. மாணவர்களுக் கிடையே மோதல் ஏற்பட்டு கத்திக்குத்து போன்ற சம்பவங்கள் நடக்குமேயானால் அதுபற்றி போலீஸ் மூலமாக நடவடிக்கை எடுத்து அப்படிப்பட்ட மாணவர்களைப் பள்ளியிலிருந்து வெளி யேற்றுவது தவிர வேறு வழியில்லை. ஆகவே, அப்படிப்பட்ட நடவடிக்கைகளை அந்த நிர்வாகம் தாராளமாக எடுக்கலாம், என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முறைசாராக் கல்வித் திட்டம்.

'வினா எண். 286—**திரு. எஸ். இராசாராமன் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முறைசாராக்கல்வித் திட்டத்தை நடைமுறைப்படுத்த யார் யார் நியமிக்கப்படுகிறார்கள் ?

(ஆ) வேலையில்லா பட்டதாரிகளை இந்த பணிக்காக பயன் படுத்த அரசுக்கு ஏதாவது திட்டம் உள்ளதா ?